*கவனிக்க.-2022.11.11 ஆந் திகதிய 2306 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2307 - 2022 නොවැම්බර් මස 18 වැනි සිකුරාදා - 2022.11.18

*2307 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | - |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | 1662 |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | 1662 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 1663 |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 1664 |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2022, திசெம்பர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, நவெம்பர் மாதம் 25 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும்

*2022 இன் இல. 787*

**நியமனம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55 (2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவை யினால் இலங்கை கணக்காளர் சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த இளைப்பாறிய உத்தியோகத்தரான திரு. டபிள்யூ. ஏ. சரத் குமார அவர்கள், ஒப்பந்த அடிப்படையில் 2022, செத்தெம்பர் மாதம் 24 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக இரண்டு (02) வருட காலத்திற்கு திறைசேரியின் பிரதிச் செயலாளர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவையின் கட்டளைப்படி,

டபிள்யூ. எம். டி. ஜே. பெர்னாண்டோ,
அமைச்சரவைச் செயலாளர்.

2022, நவெம்பர் 15.

11-507

## மற்றைய நியமனங்களும் பிறவும்

*2022 இன் இல. 788*

**இலங்கை நிரந்தர கடற்படை பிரிவு**

அதிகாரிகளின் தரத்தை உயர்வுபடுத்துதல்

2021, ஒற்றோபர் மாதம் 20 ஆந் திகதியிலிருந்து வைத்தியர் லெப்டினன்ட் தரத்துக்கு :

உப லெப்டினன்ட் பாலசூரியகே தனுஷ்க கிம்ஹான பெரேரா, என்ஆர்எம் 3797, இகப

2022, மே மாதம் 11 ஆந் திகதியிலிருந்து லெப்டினன்ட் (பநிசௌ) தரத்துக்கு :

உப லெப்டினன்ட் (பநிசௌ) ஹபக்வல வடவல கங்காணமலாகே அநுர உதய குமார, என்ஆர்டப் 4215, இகப

2022, சனவரி மாதம் 14 ஆந் திகதியிலிருந்து வேலை பார்க்கும் லெப்டினன்ட் தரத்துக்கு :

உப லெப்டினன்ட் வீரக்கொடி கிம்ரிவி குஷ்மால் விஜேகுண வர்தன விக்ரமதிலக, என்ஆர்எக்ஸ் 4131, இகப

2021, சனவரி மாதம் 14 ஆந் திகதியிலிருந்து உப லெப்டினன்ட் (இ) தரத்துக்கு :

வேலை பார்க்கும் உப லெப்டினன்ட் (இ) அமன்த நிர்மான் தெடன்கொட, என்ஆர்ஈ 4140, இகப

வேலை பார்க்கும் உப லெப்டினன்ட் (இ) ஹபு அச்சில்லாகே சஞ்ஜய விராஜ் ஹபுஆரச்சி, என்ஆர்ஈ 4144, இகப

வேலை பார்க்கும் உப லெப்டினன்ட் (இ) ப்ரன்க் பீடர் ஸ்டென்வோல், என்ஆர்ஈ 4149, இகப

வேலை பார்க்கும் உப லெப்டினன்ட் (இ) வேவலகே பிரனீத் நிர்மால் பெர்னாந்து, என்ஆர்ஈ 4152, இகப

2021, சனவரி மாதம் 14 ஆந் திகதியிலிருந்து உப லெப்டினன்ட் (சிஇ) தரத்துக்கு :

வேலை பார்க்கும் உப லெப்டினன்ட் (சிஇ) மந்திரி வித்தான அவிஷ்க டிமேஷ், என்ஆர்சீ 4141, இகப

2021, சனவரி மாதம் 14 ஆந் திகதியிலிருந்து உப லெப்டினன்ட் (வி) தரத்துக்கு :

வேலை பார்க்கும் உப லெப்டினன்ட் (வி) காரியவஸம் போவிதந்திரி தேவின்த தீகாயு, என்ஆர்எல் 4142, இகப

வேலை பார்க்கும் உப லெப்டினன்ட் (வி) கோதாகொட கமகே இருச தெவ்மின, என்ஆர்எல் 4145, இகப

வேலை பார்க்கும் உப லெப்டினன்ட் (வி) வராஹேன லியனகே ரவிஷ்க இஷான் ப்ரேமகுமார, என்ஆர்எல் 4146, இகப

வேலை பார்க்கும் உப லெப்டினன்ட் (வி) உதயங்க தனுஷ்க ரன்தெனிய, என்ஆர்எல் 4148, இகப

வேலை பார்க்கும் உப லெப்டினன்ட் (வி) கசுன் சுதார விஜேவர்தன, என்ஆர்எல் 4150, இகப

வேலை பார்க்கும் உப லெப்டினன்ட் (வி) கஸ்தூரி ஆரச்சி வித்தானகே பஸன் சதரோசன கஸ்தூரிஆரச்சி, என்ஆர்எல் 4151, இகப

டிஎன்எஸ் உளுகேதென்ன ஆர்எஸ்பீ*, வீஎஸ்வீ,
யூஎஸ்பீ, என்டிசீ, பீஎஸ்சீ,
வயிஸ் அத்மிரால்,
கடற்படை தளபதி.

கொழும்பு,
2022, நவெம்பர் 08.

11-347

# அரசாங்க அறிவித்தல்கள்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### காணிப் பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் கீழான அறிவித்தல் (அத்தியாயம் 120)

*கீழ்க் குறிப்பிட்ட பட்டோலையில் காணப்படும் II ஆம் நிரலில் விபரிக்கப்படும் காணிகள் I ஆம் நிரலில் காணப்படுவதும் கிழிந்தோ அல்லது காணாமலோ போயிருக்கும் இருமடித்தாள்கள் சம்பந்தமாக III ஆம் நிரலில் காணப்படும் உறுதிகளிலிருந்து தற்காலிகமாக காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 120) 4 ஆம் பிரிவின் கீழ் மீள அமைக்கப்பட்டிருக்கின்றது.*

*2. 2022.11.11 தொடக்கம் 2022.11.25 ஆந் திகதி வரை அனைத்து வேலை நாட்களிலும் மு.ப. 10.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களை விரும்பியவர்கள் பார்வையிடுவதற்கு அத்தனகல்ல காணிப்பதிவகத்தில் வைத்திருக்கப்படும்.*

*3. திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களில் சேர்க்கப்பட்டிருக்கும் ஏதேனும் விபரங்கள் சம்பந்தமாக பதிவு சம்பந்தமாக எவரேனும் ஆட்சேபனையினை தாக்கல் செய்யவோ அல்லது தவறாக விடப்பட்டிருக்கும் விபரங்களை அல்லது பதிவுகளை சேர்க்கப்பட வேண்டுமெனவோ விரும்பின் அவை தொடர்பாக முறைப்பாடுகள் அல்லது கோரிக்கைகளைச் செய்வோர் கீழே கையொப்பமிட்டுள்ளவரது பெயருக்கு எழுத்து மூலம் 2022.12.02 ஆந் திகதிக்குப் பிந்தாமல் பதிவஞ்சல் மூலம் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும். ஆட்சேபனைகள் அல்லது கோரிக்கைகள் ஆவண ரீதியான ஆதாரங்களுடன் அனுப்பப்படுதல் வேண்டும்.*

பீ. எஸ். பி. அபேவர்த்தன,
பதிவாளர் நாயகம்.

எமது இல. : ஆர்ஜீ/என்பீ/11/2/23/2019/ஏடு. தயா,
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவை மாவத்தை,
பத்தரமுல்லை.

**அட்டவணை**

| நிரல் I<br>பதிவு செய்யப்பட்ட புத்தகங்களில் சிதைவடைந்த ஏடுகள் பற்றிய விபரங்கள் | நிரல் II<br>காணி பற்றிய விபரம் | நிரல் III<br>பதிவு செய்யப்பட்ட உறுதிகள் பற்றிய விபரம் |
|---|---|---|
| கம்பஹா மாவட்டத்தின் அத்தனகல்ல காணிப் பதிவகத்தின் மீக/மீரி பிரிவின் 04 ஆவது புத்தகத்தின் 404 ஆவது ஏடு. | மேல் மாகாணத்தின், கம்பஹா மாவட்டத்தின், மீரிகம பிரதேச செயலாளர் பிரிவில் 26/ 27 கல்எலிய, பல்லெவெல கிராம அலுவலர் பிரிவில் கல்எலிய, பல்லெவெல இல் அமைந்துள்ள "புபுலேகந்த வத்த-கொட்டகந்த" என்னும் காணிக்கு அளவீட்டதிபதியினால் அளவிட்டுத் தயாரிக்கப்பட்ட தெ. மெ. அ. அ. 68 உடைய அளவீட்டின் காணித்துண்டு இலக்கம் 304 உடைய காணிக்கான எல்லைகள்:<br>வடக்கு : பிரவேச பாதை ;<br>கிழக்கு : பிரவேச பாதை ;<br>தெற்கு : துண்டு இலக்கம் 308;<br>மேற்கு : துண்டு இலக்கம் 307.<br>விஸ்தீரணம் : 00ஏ.00றூ.00பே. ஹெக். 0.460. | 1. சனாதிபதி செயலாளரினால் 1986.12.30 ஆந் திகதி அளிக்கப்பட்ட இலக்கம் கம்/பிர/9401 உடைய அளிப்புப்பத்திரம். |

11-327

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## மக்கள் வங்கி

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D பிரிவின் கீழான தீர்மானம்*

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D பிரிவின் கீழ் மக்கள் வங்கியின் பணிப்பாளர்கள் சபையினால் 2022, ஒற்றோபர் 28 ஆந் திகதி தமது கூட்டத்தில் கீழே காணப்படும் தீர்மானங்களை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாக இத்துடன் அறியத்தருகின்றோம்.*

பிரசித்த நொத்தாரிசு திருமதி தர்ஷனி தசநாயக்க என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2021.08.13 ஆந் திகதியிலான இலக்கம் 3819 உடைய ஈட்டு முறி மற்றும் 2016.01.20 அந் திகதியிலான இலக்கம் 2317 உடைய ஈட்டு முறியின் மீதும் பெற்றுக்கொண்ட கடனினை மீள செலுத்துவதை, மதுஷ பத்மகுமார கமகே கல்கொரடுவகே பிரேமதாச மறுபெயர் கல்கொரடுவகே பிரேமதாச கமகே என்பவர்கள் தவறவிட்ட காரணத்தினால் அவர்களால் வங்கிக்கு செலுத்த வேண்டிய நிலுவைகளாக மேலே குறிப்பிடப்பட்ட இலக்கம் 3819 ஈட்டு முறியின் மீது மூன்று கோடி எண்பத்து மூன்று இலட்சத்து எண்பதாயிரம் ரூபா (ரூபா 3,83,80,000.00) அதன் மீது 2022.09.06 ஆந் திகதியில் அறவிட்டுக்கொள்ளப்பட வேண்டிய நிலுவை வட்டியாக காணப்பட்ட இருபத்தேழு இலட்சத்து ஓராயிரத்து எண்ணூற்று இருபத்தொரு ரூபா இருபத்தொரு சதமும் (ரூபா 2,701,821.21) உள்ளடங்களாக மொத்த நிலுவையாக நான்கு கோடி பத்து இலட்சத்து எண்பத்தோராயிரத்து எண்ணூற்று இருபத்தொரு ரூபா இருபத்தொரு சதமும் (ரூபா 4,10,81,821.21) ஆக காணப்படுகின்றது. ஆதலால் குறித்த தொகையை முற்றாக செலுத்தி முடிக்கும் வரை 2022.09.07 ஆந் திகதியிலிருந்து மூன்று கோடி எண்பத்து மூன்று இலட்சத்து எண்பதாயிரம் ரூபா (ரூபா 3,83,80,000.00) எனும் தொகை மீது AWPLR + 5.5% மேலதிக வட்டியினையும்,

குறித்த இலக்கம் 2317 உடைய ஈட்டு முறியின் மீது முப்பத்தொட்டு இலட்சத்து எண்பத்தொட்டாயிரத்து எண்ணூற்று எண்பத்தொன்பது ரூபா ஆறு சதமும் (ரூபா 3,888,889.06) அதன் மீது 2022.09.06 ஆந் திகதியில் அறவிட்டுக் கொள்ளப்பட வேண்டிய நிலுவை வட்டியாக காணப்பட்ட இரண்டு இலட்சத்து இரண்டாயிரத்து நூற்று நாற்பத்தொன்பது ரூபா அறுபத்திரெண்டு சதமும் (ரூபா 202,149.62) உள்ளடங்களாக மொத்த நிலுவையாக நாற்பது இலட்சத்து தொண்ணூற்றோராயிரத்து முப்பத்தெட்டு ரூபா அறுபத்தெட்டு சதமும் (ரூபா 4,091,038.68) ஆதலால் குறித்த தொகையை முற்றாக செலுத்தி முடிக்கும் வரை 2022.09.07 ஆந் திகதியிலிருந்து முப்பத்தெட்டு இலட்சத்து எண்பத்தெட்டாயிரத்து எண்ணூற்று எண்பத்தொன்பது ரூபா ஆறு சதமும் (ரூபா 3,888,889.06) எனும் தொகை மீது AWPLR + 4.5% மேலதிக வட்டியினையும்,

ஏல விற்பனைத் திகதி வரையில் வட்டியினையும் அறவிட்டுக்கொள்வதற்கும் குறித்த சட்டத்தின் "29L" பிரிவின் கீழ் அறவிட்டுக்கொள்ளப்படவேண்டிய பணம் மற்றும் கட்டணங்களுடன் ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்துக்கொண்டு குறித்த மூன்று கோடி எண்பத்து மூன்று இலட்சத்து எண்பதாயிரம் ரூபா (ரூபா 3,83,80,000.00) எனும் தொகை மற்றும் அதற்கான வட்டியினையும், முப்பத்தெட்டு இலட்சத்து எண்பத்தெட்டாயிரத்து எண்ணூற்று எண்பத்தொன்பது ரூபா ஆறு சதமும் (ரூபா 3,888,889.06) எனும் தொகை மற்றும் அதற்கான வட்டியினையும் அறவிட்டுக்கொள்வதற்கு கொழும்பு உத்தரவு பெற்ற ஏலதாரர் குருவிட்டகே பிரேமலால் நவநந்தன சில்வா அவர்கள் மூலம் குறித்த இலக்கம் 3819 மற்றும் 2317 உடைய ஈட்டு முறிகளின் அடிப்படையில் மேற்படி வங்கியில் ஈடு வைக்கப்பட்டுள்ள நிலையான சொத்துக்கள் மற்றும் வளவுகள் திறந்த ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் மூலம் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபை இத்தால் தீர்மானித்துள்ளது.

### ஈடு வைக்கப்பட்ட சொத்து தொடர்பான விபரங்கள்

சப்ரகமுவ, மாகாணத்தில், இரத்தினபுரி மாவட்டத்தில், குருவிட்ட கோரளையில், தகுண உட பத்துவையில், இரத்தினபுரி பிரதேச செயலக பிரிவில், இரத்தினபுரி நகர சபை எல்லையில், 152 டீ மிஹிந்துகம கிராம உத்தியோகத்தர் பிரிவில், கொஸ்பெலவின்ன ஊரில் அமைந்துள்ள "கேட் பீல்ட்" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் எச். பீ. எஸ். ராஜபக்ஷ அவர்களால் 2015.08.28 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 5962 உடைய வரைபடத்தில் A என குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு.

இதன் எல்லைகளாக,

வடக்கு: இலக்கம் 106 G வரைபடத்தில் இல் 22 ஆம் இலக்க காணித்துண்டு; கிழக்கு: இலக்கம் 106 G வரைபடத்தில் இல் 24 ஆம் இலக்க மற்றும் 27 ஆம் இலக்க காணித்துண்டு; தெற்கு: இலக்கம் 106 G வரைபடத்தில் இல் 29 ஆம் இலக்க காணித்துண்டு; மேற்கு: இலக்கம் 106 G வரைபடத்தில் இல் 97 ஆம் இலக்க பாதையுமாக அமைந்துள்ள ஒரு றூட் மூன்று தசம் இரண்டு பர்சஸ் (ஏ00. றூ01. பே 3.20) அளவிலான காணியும் அதில் உள்ளடங்கியுள்ள கட்டிடங்கள் மரம், செடி, கொடிகள், பழங்கள் உள்ளடங்களாக. இக்காணியானது உத்தரவு பெற்ற நில அளவையாளர் எம். எஸ். டீ. பீ. சேனாதீர அவர்களால் 1964.07.02 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம்

106 G உடைய வரைபடத்தில் 25 ஆம் மற்றும் 26 ஆம் இலக்க காணித்துண்டுகள் ஒன்றினைந்த காணித்துண்டாகும்.

இக்காணி தற்போது இரத்தினபுரி காணிப் பதிவகத்தில் நிரல் இலக்கம் K 167/102 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
இரத்தினபுரி.

மக்கள் வங்கி,
பிராந்திய அலுவலகம்,
புதிய நகரம்,
இரத்தினபுரி.

11-279

---

## பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

வாடிக்கையாளரின் பெயர்கள் : திரு. மாதம்பகே திலன்க லகி குணரத்ன மற்றும் திருமதி யக்தெஹிகே பத்மினி சில்வா
கிளை : மினுவங்கொடை

2022.06.28 ஆம் திகதியன்று 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பீ.எல்.சீ இன் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பின்வருமாறு விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டது :

"கடப்பாடுடையவரான" மாதம்பகே திலன்க லகி குணரத்ன மற்றும் "கடப்பாடுடையவரான/ஈடுவைத்தவரான" யக்தெஹிகே பத்மினி சில்வா ஆகியோர் பதிவு இல. PQ 48 ஐக் கொண்ட பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பீஎல்சீ இன் சார்பில் பிரசித்த நொத்தாரிசு டீ. எல். எம். டீ. விஜேசிங்ஹ என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2018.04.27 ஆந் திகதியிடப்பட்ட முதன்மை ஈட்டுமுறி இல. 323 மற்றும் 2021.04.12 ஆந் திகதியிடப்பட்ட இரண்டாம் நிலை ஈட்டுமுறி இல. 861 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளனர்.

ஆதலால்;

பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பீஎல்சீ (இதனகத்துப் பின்னர் சிலவேளைகளில் "வங்கி" என அழைக்கப்படும்) இற்கு வரவேண்டியும் சேரவேண்டியும் உள்ளது.

1. 2022.04.21 ஆந் திகதி வரையான ஆரம்ப பணத்தொகை மற்றும் வட்டியானது 2022.04.22 ஆந் திகதியிலிருந்து ரூபா ஏழு மில்லியன் ஐந்து இலட்சத்து எண்பத்து ஆறாயிரத்து அறுநூற்று முப்பத்தைந்தும் சதம் எழுபத்து நான்கு (ரூபா 7,586,635.74) பணத்தொகைக்கு 16% வருடாந்த வட்டியுடனும், மற்றும்

2. 2022.04.21 ஆந் திகதி வரையான ரூபா 646,399.81 எனும் ஆரம்ப பணத்தொகையானது 2% வருடாந்த வட்டியுடன் சேர்த்து 2022.04.22 ஆந் திகதிக்கு ரூபா ஆறு இலட்சத்து நாற்பத்து ஆறாயிரத்து முந்நூற்று தொண்ணூற்று ஒன்பதும் சதம் எண்பத்தொன்று (ரூபா 646,399.81) ஆகவும், சொல்லப்பட்ட 323 மற்றும் 861 ஆம் இலக்க ஈட்டுமுறிகளுக்கான பணத்தை செலுத்தி முடிக்கும் வரை வரவேண்டியும், சேரவேண்டியும் உள்ளது.

இதன் மூலம் தீர்மானிக்கப்படுவதாவது:-

மேற்சொல்லப்பட்ட பணத்தொகை ரூபா எட்டு மில்லியன் இரண்டு இலட்சத்து முப்பத்து மூவாயிரத்து முப்பத்தைந்தும் சதம் ஐம்பத்தைந்து (ரூபா 8,233,035.55) ஐ 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய பணங்கள், செலவுகள் மற்றும் மேற்கூறப்பட்ட திகதியிலிருந்து விற்பனை திகதி வரையான வட்டியுடனும் சேர்த்து எவையேனும் கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிடுவதற்காக இத்துடனுள்ள அட்டவணையில் மேலும் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள மாதம்பகே திலன்க லகி குணரத்ன மற்றும் யக்தெஹிகே பத்மினி சில்வா ஆகியோரினால் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஈட்டுமுறி இல. 323 மற்றும் 861 இன் ஆதனத்தை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் கோட்டை, பெத்தேகன பாதை, இல. 134 ஐச் சேர்ந்த உரிமம் பெற்ற ஏலதாரர் பீ. கே. ஈ. சேனாபதி என்பவருக்கு அதிகாரமும் தத்துவமும் அளிக்கின்றதென இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

### அட்டவணை

மேல் மாகாணம், (கம்பஹா பதிவு பிரிவிற்குள்), கம்பஹா மாவட்டம், தாசிய பத்துவ, அலுத்குரு கோரளை, ஆண்டியம்பலம உப காரியாலயம், கட்டான பிரதேச சபை எல்லைக்குட்பட்ட, கட்டான பிரதேச செயலாளர் பிரிவு, இல. 154, தெவமொட்டாவ

கிராம உத்தியோகத்தர் பிரிவு, தெவமொட்டாவ கிராமத்தில் அமைந்துள்ள கம மெத பார, வட்டார இலக்கங்கள் 38 மற்றும் 40 இல், கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் சகலவற்றையும் உள்ளடக்கிய "நெல்லிகஹவத்த மற்றும் தெவடகஹவத்தயின் தெற்கு பகுதி" என்று அழைக்கப்படும் காணி, (உரிமம் பெற்ற நில அளவையாளர் பீ. டீ. என். பீரிஸ் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1994, சனவரி 10 ஆந் திகதிய வரைபட இல. 341 இல் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 2 இன் மீளளவையாகும்) உரிமம் பெற்ற நில அளவையாளர் பீ. டீ. என். பீரிஸ் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2014, ஒற்றோபர் 10 ஆந் திகதிய வரைபட இல. 6240 இல் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு 1 இன் எல்லைகளாவன வடக்கு: பாதை (பிரதேச சபை); கிழக்கு: 10 அடி அகல பாதை; தெற்கு:டீ.நெல்சன் திலகரத்ன என்பவரின் காணி மற்றும் மேற்கு: எம். சிறியாவதி என்பவரின் காணி மற்றும் இக்காணியானது சொல்லப்பட்ட வரைபட இல. 6240 இற்கு அமைய இருபது தசம் ஆறு பூச்சியம் பர்ச்சஸ் (ஏ00. றூ00. பே20.60) விஸ்தீரணத்தை கொண்டுள்ளதுடன் இக்காணியானது நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் தொகுதி/ பக்கம் H 59/ 51 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி

தேவிகா ஹல்வத்துர,
முகாமையாளர் - அறவீடுகள்.

11-286

---

## செலான் வங்கி பீ. எல்.சீ.

(2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ 9 குறிப்பீட்டின் கீழ் பதிவு செய்யப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தாலும் கடன்களை மீள அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் செலான் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்

கிளை: விஜயராம
கணக்கு இலக்கம்: 1350-12886524-001

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், வரையறுக்கப்பட்ட செலான் வங்கி பீ. எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் 2022.09.22 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

களுத்துறையை சேர்ந்த சாலனி பிரதீபா வல்பிற்ற "ஆர். அன்ட் எச். பஷன்ஸ்" என்ற பெயரிலான நிறுவனத்தின் ஏக உரிமையாளராக வர்த்தகத்தை முன்னெடுப்பவர் களுத்துறையில் வர்த்தக பதிவு இலக்கம் WSS 574 இன் கீழ் பதிவு செய்யப்பட்டதுடன் களுத்துறையை சேர்ந்த சாலனி பிரதீபா வல்பிற்ற "கடப்பாட்டாளர்/ அடகுவைத்தவர்" ஆக செயல்படுவதுடன், செலான் வங்கி பீஎல்சீ (2007 ஆம் ஆண்டின் நிறுவனங்கள் சட்ட இலக்கம் 07 இன் கீழ் நிறுவன பதிவு இலக்கம் PQ 9 இல் பதிவு செய்யப்பட்டது) சார்பில், பிரசித்த நொத்தாரிசு தீபானி ரங்கேயினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, 2018, ஒகத்து 03 ஆந் திகதியிடப்பட்ட 1810 ஆம் இலக்க அடகு முறி மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலாலும், 2019, யூன் 17 ஆந் திகதியன்று வரையிலான வட்டி பிரதான கணக்கு என்பன உள்ளடங்கலாக செலான் வங்கி பீஎல்சீ தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது தொண்ணூற்று மூன்று இலட்சத்து எழுபத்து ஓராயிரத்து இருநூற்று இருபத்து இரண்டு ரூபா எழுபத்து ஐந்து சதம் (ரூபா 9,371,222.75) கொண்ட பணத்தொகை அத்துடன், 2019, யூன் 18 முதல் எண்பத்து ஏழு இலட்சத்து அறுபத்து மூன்றாயிரத்து அறுநூற்று பதினொரு ரூபா அறுபத்து ஒன்பது சதம் (ரூபா 8,763,611.69) கொண்ட பணத்தொகைக்கான பதினெட்டு சத வீத (18%) வருடாந்த வட்டி என்பன சொல்லப்பட்ட முறி தொடர்பாக வழங்கப்பட்ட சமமான தவணை முன்கூட்டிய கொடுப்பனவு வசதி வாய்ப்புக்கள் அத்துடன் செலான் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) திருத்தப்பட்ட சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் மேலதிகமாக விபரிக்கப்பட்டுள்ள 1810 சொல்லப்பட்ட இலக்க அடகு முறி மூலம் செலான் வங்கி பீஎல்சீ தாபனத்திற்கு ஈடு வைக்கப்பட்டனவுமான ஆதனங்கள் மற்றும் வளவுகளும், சொல்லப்பட்ட தொண்ணூற்று மூன்று இலட்சத்து எழுபத்து ஓராயிரத்து இருநூற்று இருபத்து இரண்டு ரூபா எழுபத்து ஐந்து சதம் (ரூபா 9,371,222.75) கொண்ட பணத்தொகையுடன் 2019, யூன் 18 ஆந் திகதியிலிருந்து முன் சொல்லப்பட்ட வட்டி விகிதத்திற்கு அமைய விற்பனை நாள் வரையிலான வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் சொல்லப்பட்ட சட்டத்தின் பிரிவு 13 இன் கீழ் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) முழுத்தொகையையும் அறவிடுவதற்காக, உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் திருமதி சந்திமா கமகேயினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

### அட்டவணை

1. மேல் மாகாணம், களுத்துறை மாவட்டத்தில் உள்ள ரைகம் கோறளவின் அத்திக்காரி பற்றுவில் உள்ள பண்டாரகம பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட பண்டாரகம பிரதேச சபையின் உள்ளூர் அதிகார சபையின் எல்லைக்கு உட்பட்ட ரைகம் வடக்கு 656A கிராம அலுவலர் பிரிவிற்கு உட்பட்ட

ரைகம் கிராமத்தில் உள்ள "அமரிகேவத்த மறுபெயர் மாறவத்த" என அழைக்கப்படும் காணி, உரிமம் பெற்ற நில அளவையாளர் கே. ஆர். பெரேராவினால் தயாரிக்கப்பட்ட 2000.03.12 மற்றும் 2000.06.04 ஆந் திகதிகள் இடப்பட்ட வரைபட இலக்கம் 1408 இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாளம் இடப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் வடக்கு: வெரலுகஹமடிற்றியோவிற்ற; கிழக்கு: இத்துடனான காணித்துண்டுகள் 2 மற்றும் 4; தெற்கு: இத்துடனான காணித்துண்டு 4; மேற்கு : தெல்கஹாவத்தயில் உள்ள காணித்துண்டு 7 இன் மிகுதியான பகுதி, அத்துடன் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 1408 இற்கு அமைவான பன்னிரெண்டு பேர்ச் (ஏ00. றூ00. பே12) விஸ்தீணரத்துடனான நிலம், மரங்கள், பயிர் செய்கைகள், கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம்.

2. மேல் மாகாணம், களுத்துறை மாவட்டத்தில் உள்ள ரைகம் கோறளவின் அத்திக்காரி பற்றுவில் உள்ள பண்டாரகம பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட பண்டாரகம பிரதேச சபையின் உள்ளூர் அதிகார சபையின் எல்லைக்கு உட்பட்ட ரைகம் வடக்கு 656A கிராம சேவகர் பிரிவிற்கு உட்பட்ட ரைகம் கிராமத்தில் உள்ள "அமரிகேவத்த மறுபெயர் மாறவத்த" என அழைக்கப்படும் காணி, உரிமம் பெற்ற நில அளவையாளர் கே. ஆர். பெரேராவினால் தயாரிக்கப்பட்ட 2000.03.12ஆந் திகதி இடப்பட்ட வரைபட இலக்கம் 1408 இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 2 என அடையாளம் இடப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் வடக்கு: வெரலுகஹமடிற்றியோஓவிற்ற; கிழக்கு: வரவெற்றிகட்டிய; தெற்கு: வரைபட இலக்கம் 1408 இல் உள்ள காணித்துண்டு 3 மற்றும் காணித்துண்டு 4 (12 அடி அகலமான வீதிக்கான ஒதுக்கீடு); மேற்கு: வரைபட இலக்கம் 1408 இல் உள்ள காணித்துண்டு 1, அத்துடன் பதினான்கு பேர்ச் (ஏ00. றூ00. பே14.0) விஸ்தீரணத்துடனான நிலம், மரங்கள், பயிர் செய்கைகள், கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம்.

3. மேல் மாகாணம், களுத்துறை மாவட்டத்தில் உள்ள ரைகம் கோறளவின் அத்திக்காரி பற்றுவில் உள்ள பண்டாரகம பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட பண்டாரகம பிரதேச சபையின் உள்ளூர் அதிகார சபையின் எல்லைக்கு உட்பட்ட ரைகம் வடக்கு - 656 A கிராம சேவகர் பிரிவிற்கு உட்பட்ட ரைகம் கிராமத்தில் உள்ள "அமரிகேவத்த மறுபெயர் மாறவத்த" என அழைக்கப்படும் காணி, உரிமம் பெற்ற நில அளவையாளர் கே. ஆர். பெரேராவினால் தயாரிக்கப்பட்ட 2000.03.12 ஆந் திகதி இடப்பட்ட வரைபட இலக்கம் 1408 இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 3 என அடையாளம் இடப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் வடக்கு: வரைபட இலக்கம் 1408 இல் உள்ள காணித்துண்டு 2; கிழக்கு: வரவெற்றிகட்டிய; தெற்கு: வரைபட இலக்கம் 349 இல் உள்ள அமரிகேவத்த மறுபெயர் வாரவற்றவின் காணித்துண்டு C1 இன் மிகுதியான பகுதி; மேற்கு: வரைபட இலக்கம் 349 இல் உள்ள அமரகேவத்த மறுபெயர் வாரவற்றவின் காணித்துண்டு C2, அத்துடன் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 1408 இற்கு அமைவான பத்து பேர்ச் (ஏ00. றூ00. பே10) விஸ்தீரணத்துடனான நிலம், மரங்கள், பயிர் செய்கைகள், கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம்.

அத்துடன், பின்வரும் காணிகள் மேலானதும் உடனானதுமான வழி உரிமை மற்றும் ஏனைய தொடர்புடைய உரிமைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1. முன் சொல்லப்பட்ட ரைகம் கிராமத்தில் உள்ள "அமரகேவத்த மறுபெயர் மாறவத்த" என அழைக்கப்படும் காணி, உரிமம் பெற்ற நில அளவையாளர் கே. ஆர். பெரேராவினால் தயாரிக்கப்பட்ட 2000.03.12 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 1408 இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 4 (12 அடி அகலமான வீதிக்கான ஒதுக்கீடு) என அடையாளம் இடப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் வடக்கு: வரைபட இலக்கம் 1408 இல் உள்ள காணித்துண்டு 5, காணித்துண்டு 1 மற்றும் காணித்துண்டு 2; கிழக்கு: வரைபட இலக்கம் 1408 இல் உள்ள காணித்துண்டு 3; தெற்கு: வரைபட இலக்கம் 349 இல் உள்ள அமரிகேவத்த மறுபெயர் வெரவத்தவின் காணித்துண்டு C2; மேற்கு: பிரதான வீதி மற்றும் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 1408 இற்கு அமைவான நான்கு பேர்ச் (ஏ00. றூ00. பே4) விஸ்தீரணத்தைக் கொண்டது.

2. முன் சொல்லப்பட்ட ரைகம் கிராமத்தில் உள்ள "அமரகேவத்த மறுபெயர் மாறவத்த" என அழைக்கப்படும் காணி, உரிமம் பெற்ற நில அளவையாளர் கே. ஆர். பெரேராவினால் தயாரிக்கப்பட்ட 2000.03.12 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 1408 இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 5 (பரபெட் சுவரின் ஒரு பகுதியை கொண்ட நிலத்தின் துண்டு) என அடையாளம் இடப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் வடக்கு: தெல்கஹாவத்தையின் காணித்துண்டு 7 இன் மிகுதியான பகுதி; கிழக்கு: வரைபட இலக்கம் 1408 இல் உள்ள காணித்துண்டு 1 மற்றும் காணித்துண்டு 4; தெற்கு: வரைபட இலக்கம் 1408 இல் உள்ள காணித்துண்டு 4; மேற்கு: பிரதான வீதி மற்றும் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 1408 இற்கு அமைவான பூஜ்யம் தசம் இரண்டு பேர்ச் (ஏ00. றூ00. பே0.2) விஸ்தீரணத்தைக் கொண்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

திருமதி வி. ஏ. பரணகம,
சட்டத்தரணி,
உதவி பொது முகாமையாளர் - சட்டம்.

11 - 305

## நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அறிவித்தல்*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2022, செத்தெம்பர் 28 அன்று கீழ்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளமை இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-*

*"நிமல் கொன்ஸ்ட்ரக்ஷன்" இன் ஸ்டைல் என்ட் ஃபர்ம் எனும் பெயரின் கீழ் ஏக உரிமையாளராக வியாபாரமொன்றை நடாத்தும் கால்லகே நிமல் நயனானந்த.*

*காலியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசான குலசேகர அபயரத்ன அதிகாரம் முதியன்ஸே ராலஹாமிலாகே நெத்ரணனி குலசேகர அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018, செத்தெம்பர் 03 ஆந் திகதியிடப்பட்ட 1212 எனும் இலக்கத்தைக் கொண்ட ஈட்டு முறியின்படி, மேற்கூறப்பட்ட கால்லகே நிமல் நயனானந்த அவர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி வசதியை திருப்பிச் செலுத்துவதற்கான பாதுகாப்பாக இல. 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 இல் அமைந்துள்ள நேஷன் ட்ரஸ்ட் பாங்க் பீஎல்சீ இன் சார்பில் இங்கே அட்டவணையில் மேலும் விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களுக்கு அடமானக்காரராக/ கடமைப்பட்டவராக கால்லகே நிமல் நயனானந்த என்பவர் மேலும் விவரிக்கப்பட்டுள்ள உரிமைகள், சொத்துக்கள் மற்றும் வளாகங்கள் என்பவற்றை ஈடுவைத்து அடமானம் வைத்துள்ளார்;*

*அதனால் மேற்கூறப்பட்ட கால்லகே நிமல் நயனானந்த என்பவர் மேற்கூறப்பட்ட ஈட்டு முறியின்படி, பாதுகாப்பாக வைக்கப்பட்ட வசதிகளின் மீது செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளனர்;*

*2022.06.20 ஆந் திகதியில் உள்ளவாறு தவணைக் கடன் வசதியின் மீது வருமதியாக இருக்கக்கூடிய பன்னிரெண்டு மில்லியன் முந்நூற்று முப்பத்தி ஓராயிரத்து அறுநூற்று நாற்பத்தி ஒரு ரூபா பதினாறு சதம் (ரூபா 12,331,641.16) மூலதன நிலுவைத் தொகையின் பொருட்டு உடன்பட்டுள்ளவாறு 2022.06.21 ஆந் திகதியிலிருந்து மேலதிக வட்டியுடன் பன்னிரெண்டு மில்லியன் எழுநூற்று நாற்பத்தி இரண்டாயிரத்து நூற்றுப் பத்து ரூபா இருபத்தி ஆறு சதம் (ரூபா 12,742,110.26) தொகையையும், உதவியாளர் செலவு, சட்டரீதியான அறவீடுகள், விளம்பரச் செலவுகள் மற்றும் பெறப்பட்டதிலிருந்து குறைந்த கொடுப்பனவுகள் (ஏதும் இருப்பின்) ஏற்பட்ட வேறு ஏதேனும் கட்டணங்கள் என்பவற்றையும் அறவிட்டுக்கொள்வதற்காக அட்டவணையில் மேலும் விவரிக்கப்பட்டுள்ள உரிமைகள், சொத்துக்கள் மற்றும் வளாகங்கள் என்பவற்றை இல. 200, புதுக்கடை வீதி, கொழும்பு 12 எனும் முகவரியைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. எல். பீ. சேனாநாயக்க அவர்கள் மூலம் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கத்தைக் கொண்ட வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.*

### மேலே சொல்லப்பட்ட முதலாவது அட்டவணை

*தென் மாகாணத்தில், மாத்தறை மாவட்டத்தில் மாத்தறை நான்கு பட்டினங்களில் உள்ள மாத்தறை பிரதேச சபை எல்லைகள் மற்றும் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள வெவஇஹலகொட கிராம சேவையாளர் பிரிவிலுள்ள வெவஇஹலகொட கிராமத்தில் அமைந்துள்ள போகஹஹேன எனும் காணியின் லொட் ஏ மற்றும் லொட் பி ஆகியவை இணைந்துள்ள காணியிலிருந்து பிரித்தொதுக்கப்பட்டு அடையாளமிடப்பட்டு, அதிகாரம் பெற்ற நில அளவையாளர் ரோஹன உதயங்கொட அவர்களினால் அளந்து தயாரிக்கப்பட்ட 2015.10.26 ஆந் திகதியிடப்பட்ட 23715 ஆம் இலக்க காணி வரைபடத்திலுள்ள லொட் 8 ஆம் காணியும், அதன் மீது அமைந்துள்ள மணல், கட்டிடங்கள், பெருந்தோட்டங்கள், மற்றும் அனைத்தும் உள்ளடங்கும். மேற்கூறப்பட்ட லொட் 8 காணியானது, மேற்கூறப்பட்ட 23715 ஆம் இலக்க காணி வரைபடம் மற்றும் மாத்தறை காணிப் பதிவேட்டில் ஏ 830/01 இன் கீழ் உள்ள பதிவுக்கு இணங்க வடக்கு: லொட் 3; கிழக்கு: லொட் 22; தெற்கு: லொட் 11; மேற்கு: லொட் 30 ஆகியவற்றை எல்லைகளாகக் கொண்ட பன்னிரெண்டு பேர்ச் (ஏ00. றூ00. பே12) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியாகும்.*

*அதிகாரம்பெற்ற நில அளவையாளர் ரோஹன உயங்கொட அவர்களினால் அளந்து தயாரிக்கப்பட்ட 2015.10.26 ஆந் திகதியிடப்பட்ட 23715 எனும் இலக்க காணி வரைபடத்திலுள்ள 29, 30 மற்றும் 24 இல் அடையாளமிடப்பட்ட காணிகளுக்கு மேல் மற்றும் கீழ் மற்றும் விவரிக்கப்பட்டுள்ள பாதைக்கான ஒதுக்கத்துடன் ஒன்றாகச் செல்லும் வழியில் உரிமையுடன்*

### மேலே சொல்லப்பட்ட இரண்டாவது அட்டவணை

*தென் மாகாணத்தில், மாத்தறை மாவட்டத்தில் மாத்தறை நான்கு பட்டினங்களில் உள்ள மாத்தறை பிரதேச சபை எல்லைகள் மற்றும் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள வெவஇஹலகொட கிராம அலுவலர் பிரிவிலுள்ள வெவஇஹலகொட கிராமத்தில் அமைந்துள்ள போகஹஹேன எனும் காணியின் லொட் ஏ மற்றும் லொட் பி ஆகியவை இணைந்துள்ள காணியிலிருந்து பிரித்தொதுக்கப்பட்டு அடையாளமிடப்பட்டு, அதிகாரம் பெற்ற நில அளவையாளர் ரோஹன உதயங்கொட அவர்களினால் அளந்து தயாரிக்கப்பட்ட 2015.10.26 ஆந் திகதியிடப்பட்ட 23715 ஆம் இலக்க காணி வரைபடத்திலுள்ள லொட் 9 ஆம் காணியும், அதன் மீது அமைந்துள்ள மணல், கட்டிடங்கள், பெருந்தோட்டங்கள், மற்றும் அனைத்தும் உள்ளடங்கும். மேற்கூறப்பட்ட லொட் 9 காணியானது, மேற்கூறப்பட்ட 23715 ஆம் இலக்க காணி*

வரைபடம் மற்றும் மாத்தறை காணிப் பதிவேட்டில் ஏ 830/ 02 இன் கீழ் உள்ள பதிவுக்கு இணங்க வடக்கு: லொட் 2; கிழக்கு: லொட் 30; தெற்கு: லொட் 10; மேற்கு: 1407 ஆம் இலக்க காணி வரைபடத்திலுள்ள லொட் 3 ஆகியவற்றை எல்லைகளாகக் கொண்ட பன்னிரெண்டு பேர்ச் (ஏ00. றூ00. பே12) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியாகும்.

அதிகாரம்பெற்ற நில அளவையாளர் ரோஹன உயங்கொட அவர்களினால் அளந்து தயாரிக்கப்பட்ட 2015.10.26 ஆந் திகதியிடப்பட்ட 23715 எனும் இலக்க காணி வரைபடத்திலுள்ள 29, 30 மற்றும் 24 இல் அடையாளமிடப்பட்ட காணிகளுக்கு மேல் மற்றும் கீழ் மற்றும் விவரிக்கப்பட்டுள்ள பாதைக்கான ஒதுக்கத்துடன் ஒன்றாகச் செல்லும் வழியில் உரிமையுடன்

**மேலே சொல்லப்பட்ட மூன்றாவது அட்டவணை**

தென் மாகாணத்தில், மாத்தறை மாவட்டத்தில் மாத்தறை நான்கு பட்டினங்களில் உள்ள மாத்தறை பிரதேச சபை எல்லைகள் மற்றும் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள வெவஇஹலகொட கிராம சேவையாளர் பிரிவிலுள்ள வெவஇஹலகொட கிராமத்தில் அமைந்துள்ள போகஹஹேன எனும் காணியின் லொட் ஏ மற்றும் லொட் பி ஆகியவை இணைந்துள்ள காணியிலிருந்து பிரித்தொதுக்கப்பட்டு அடையாளமிடப்பட்டு, அதிகாரம் பெற்ற நில அளவையாளர் ரோஹன உதயங்கொட அவர்களினால் அளந்து தயாரிக்கப்பட்ட 2015.10.26 ஆந் திகதியிடப்பட்ட 23715 ஆம் இலக்க காணி வரைபடத்திலுள்ள லொட் 11 ஆம் காணியும், அதன் மீது அமைந்துள்ள மணல், கட்டிடங்கள், பெருந்தோட்டங்கள், மற்றும் அனைத்தும் உள்ளடங்கும். மேற்கூறப்பட்ட லொட் 11 காணியானது, மேற்கூறப்பட்ட 23715 ஆம் இலக்க காணி வரைபடம் மற்றும் மாத்தறை காணிப் பதிவேட்டில் ஏ 830/ 01 இன் கீழ் உள்ள பதிவுக்கு இணங்க வடக்கு: லொட் 8; கிழக்கு: லொட் 22; தெற்கு: லொட் 30; மேற்கு: லொட் 30 ஆகியவற்றை எல்லைகளாகக் கொண்ட பன்னிரெண்டு பேர்ச் (ஏ00. றூ00. பே12) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியாகும்.

அதிகாரம்பெற்ற நில அளவையாளர் ரோஹன உயங்கொட அவர்களினால் அளந்து தயாரிக்கப்பட்ட 2015.10.26 ஆந் திகதியிடப்பட்ட 23715 எனும் இலக்க காணி வரைபடத்திலுள்ள 29, 30 மற்றும் 24 இல் அடையாளமிடப்பட்ட காணிகளுக்கு மேல் மற்றும் கீழ் மற்றும் விவரிக்கப்பட்டுள்ள பாதைக்கான ஒதுக்கத்துடன் ஒன்றாகச் செல்லும் வழியில் உரிமையுடன்

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

தேஜா சில்வா,
கம்பனிச் செயலாளர்.

242, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 02.

11-307